# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் தேதி, வியாழக்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 21 ம் நாள்

CC No.36/2020
(CNR No: TNAL070001602020)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>தா.பழூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 135/2019. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | 1. கோகுல்ராஜ் , த.பெ.கோவிந்தராஜ்<br>2. முனியமுத்து த/பெ.அறிவழகன்<br>3. பிரபாகரன் த/பெ.அன்பழகன்<br>4. வீரவேல் த/பெ.முத்து<br>5. குமரன் த/பெ.பொன்னையன்<br>6. மாவீரன் த/பெ.ரெங்கநாதன்<br>7. வீரகுமார், த/பெ.வேலுசந்திரன்<br>அனைவரும் காலனிதெரு, கார்குடி,<br>அரியலூர் மாவட்டம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | 1 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | 1 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 12.07.2019 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 13.07.2019 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 2 வது எதிரி – 14.07.2019 | 1, 4, 5, 6, 7 எதிரிகள் முன்பிணை– 24.07.2019 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 வது எதிரி – 15.07.2019 | 2, 3 பிணை– 19.07.2019 | |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 20.07.2020 | | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச் சாட்டு வனைந்து வினவப் பட்ட நாள் | : | 11.09.2023 | | |
| 8 | கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | 1) எதிரிகள் தரப்பில் U/s.320 Cr.P.C ன் கீழ் 20.07.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.03/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 20.07.2026 | 20.07.2026 |
| | | | அ.சா.2 | 20.07.2026 | 20.07.2026 |
| | | | அ.சா.3 | 20.07.2026 | 20.07.2026 |
| | | | அ.சா.4 | 20.07.2026 | 20.07.2026 |
| | | | அ.சா.5 | 29.07.2026 | 29.07.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 31.07.2026 | | |

இவ்வழக்கு கடந்த 21.02.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 06.08.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இளவரசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

# தீர்ப்புரை

1. இவ்வழக்கின் புகார்தாரரின் மைத்துனர் துரைராஜ் என்பவர் இறந்துவிட்டதால் பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு கடந்த 12.07.2019ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் புகார்தாரர் தனது உறவினர்களுடன் சுடுகாட்டும் செல்லவேண்டி கார்குடி காலனி தெரு வழியாக பிரேதத்தை எடுத்து செல்லம்போது 1வது எதிரி வன்னியர் தேவிடியா மகன்களே, குச்சிகாரி மகன்களே என்று அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் இன்னொரு கட்டையையும் காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்றும், பிரேதத்தை சுடுகாட்டில் வைத்து எரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தபோது 2 முதல் 7 எதிரிகள் ஒன்று சேர்ந்து நீங்க என்னடா வன்னியர்ல பெரிய ஆள் புண்டையா என்று திட்டிக்கொண்டே கோகுல் என்பவரை கட்டையால் அடித்தும், சாட்சி–2ஐ கட்டையால் நெஞ்சில் அடித்தும், சாட்சி–3ஐ இடக்கையில் வாங்கின் புடங்கையால் இடித்து சொற்பகாயத்தையும், சாட்சி–4ஐ காலால் எட்டி உதைத்து கீழே தள்ளியும் பின்னர் அவர்கள் அங்கிருந்து செல்லும்போது கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி என்றைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ளார் என்றும், மேற்படி 1வது எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் அதனை நன்கு பரிசீலித்து மேற்படி 1வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் படியும், வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் 1வது

எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, விளக்கி வினவ எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-**

7. அ.சா.1 பாஸ்கர் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் இரவு தானும் மூர்த்தி, கொஞ்சி, ராஜ்குமார் ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது என்றும், அந்த சமயத்தில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், இரவு நேரம் என்பதால் தங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, தான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 மூர்த்தி தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் இரவு தானும், பாஸ்கர், கொளஞ்சி, ராஜ்குமார் ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது என்றும், அந்த சமயத்தில்

கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள் என்றும், இரவு நேரம் என்பதால் தங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார் என்று சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 கொளஞ்சி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் இரவு தானும் பாஸ்கர், மூர்த்தி, ராஜ்குமார் ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது என்றும், அந்த சமயத்தில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், இரவு நேரம் என்பதால் தங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 ராஜ்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் இரவு தானும்பாஸ்கர், மூர்த்தி, கொளஞ்சி ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது என்றும், அந்த சமயத்தில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள் என்றும், இரவு நேரம் என்பதால் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று

நினைத்து, அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார் என்று சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.5 திரு.குப்பமுத்து தனது சாட்சியத்தில் வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் புகார்தாரர் எதிரியுடன் சமாதானமாகி விட்டபடியாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 13.07.2019 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அரியலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலினைப் பெற்று, அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையலிருந்த பாஸ்கர் என்பவரிடம் புகார்வாக்கும் அ.த.சா.ஆ.2 ஐ பெற்று, நிலைய மனு எண் 135/2019, ச/பி. 147, 148, 294(b), 324, 506(2) இதசவின்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துவேல், அரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடியபோது, 2 வது எதிரி முனியமுத்து என்பவரை 14.07.2019 ம் தேதி 15.00 மணிக்கு காரைக்குறிச்சி பஸ் ஸ்டாப் அருகில் வைத்து கைது செய்து, அவர் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் செல்வராலஜ், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், 3 வது எதிரி பிரபாகரன் என்பவரை 15.07.2019 ம் தேதி 14.10 மணிக்கு கோட்டியால் பஸ் நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து விசாரணை செய்தபோது, அவர் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலும் இன்றி தாமாக முன்வந்து

கொடுத்து ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ–6 ஐ சாட்சிகள் ரெங்கராஜன் மற்றும் மகேந்திரன் ஆகியோர் முன்னலையில் பதிவு செய்து, எதிரியிடமிருந்து Bajaj Plusar 150 Red and Black colour TN 68 M 8134 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை சாட்சிகள் ரெங்கராஜன் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.7 தயார் செய்து, வழக்கு சொத்து சா.பொ.1 ஐ படிவம் 91 அ.த.சா.ஆ.8 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்டறும், 1, 4, 5, 6, 7 எதிரிகள் மாண்புமிகு அரியலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று, பிணையில் சென்றுவிட்டார்கள் என்றும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமதி. அன்புசெல்வி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர் கொடுத்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.9 முதல் அ.த.சா.ஆ.12 ஐ பெற்றார் என்றும், பின்னர் 1 முதல் 7 வரையிலான எதிரிகள் மீதான விசாரணையை முடித்து, 28.07.2019 ம் தேதி எதிரிகளின் மீது ச/பி. 147, 148, 294(b), 324, 506(2)இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுவிட்டதாலும், அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 5 முதல் 11 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

13. எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரிகள் சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

14. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

16. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

17. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் அ.சா.1ன் மைத்துனர் துரைராஜ் என்பவர் இறந்துவிட்டதால் பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு கடந்த 12.07.2019ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் அ.சா.1 தனது உறவினர்களுடன் சுடுகாட்டும் செல்லவேண்டி கார்குடி காலனி தெரு வழியாக பிரேதத்தை எடுத்து செல்லம்போது 1வது எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி, அருவாள் மற்றும் கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், 2 முதல் 7 எதிரிகள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கோகுல் என்பவரை கட்டையால் அடித்தும், அ.சா.2ஐ கட்டையால் நெஞ்சில் அடித்தும், அ.சா.3ஐ இடக்கையில் வாங்கின் புடங்கையால் இடித்தும், அ.சா.4ஐ காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், அரிவாளை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் இரவு தானும் மூர்த்தி, கொஞ்சி, ராஜ்குமார் ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது என்றும், அந்த சமயத்தில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அந்த கும்பலில் யாரோ தங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள் என்றும், இரவு நேரம் என்பதால் தங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும், அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் தங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, தான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2

முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் தங்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளோடு தாங்கள் சமாதானமாகிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அரசுதரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்களது சாட்சியங்கள் நம்பக்கூடியதாக இல்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களின் சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில், எதிரிகள் அனைவரும் ஆபத்தான ஆயுதங்களுடன் ஒன்றுகூடி அ.சா.1 முதல் அ.சா.4 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, 2 முதல் 7 எதிரிகள் அனைவரும் கோகுல் என்பவரை கட்டையால் அடித்தும், அ.சா.2 ஐ கட்டையால் நெஞ்சில் அடித்தும், அ.சா.3 ஐ இடக்கையில் வாங்கின் புடங்கையால் இடித்தும், அ.சா.4 ஐ காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி சொற்பகாயத்தை ஏற்படுத்தினார் என்றோ, எதிரிகள் அனைவரும் அரிவாள் மற்றும் கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

19. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.4 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. முடிவாக 1வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(b), 506(2)ன் கீழும், 2 முதல் 7 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரிகள் **"குற்றவாளிகள் இல்லை"** என்று தீர்மானித்து,

எதிரிகளை கு.வி.மு.ச பிரவு 248(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22. எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

23. இவ்வழக்கின் வழக்கு சொத்தான (RP No.62/2019) TN 68 M 8134 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar 150 இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் உரிய மனு தாக்கல் செய்து இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை : –</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 – பாஸ்கர்

அ.சா.2 – மூர்த்தி

அ.சா.3 – கொளஞ்சி

அ.சா.4 – இராஜ்குமார்

அ.சா.3 – குப்பமுத்து, உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள உள்ள அ.சா.1ன் கையெழுத்து

அ.த.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.6– 3 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.த.சா.ஆ.7 – கைப்பற்றுதல் மகசர்

அ.த.சா.ஆ.8 – படிவம் 91

அ.த.சா.ஆ.9 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் (அ.சா.1)

அ.த.சா.ஆ.10 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் (அ.சா.2)

அ.த.சா.ஆ.11 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் (அ.சா.3)

அ.த.சா.ஆ.12 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் (அ.சா.4)

<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u> : இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> : இல்லை

<u>குறிப்பு:</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(Sd/-P.Kanimozhi)

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.